செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி வரு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்- சாதாரண வரு ஐப்பசி மீ கூஉ வெள்ளிக்கிழமை (23-10-1970) [இல-உகூ

# கந்தசட்டி விரதாரம்ப நிர்ணயம்

## 31-10-70- இல் கொள்வதே சிவாகமத்துக்கு உடன்பாடு

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள், அச்சுவேலி

புரட்டாதி 23-ஆம் உ (9-10-70) வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில் உடுப்பிட்டி திரு. இ காங்கேசு அவர்கள் கந்தசட்டி விரதத்தை எத்தினத்தில் அனுட்டிப்பது என்னும் முகநாமத்துடன் ஒரு வியாசத்தை எழுதியிருந்தார்.

கந்தசட்டி விரதாரம்பம் சாந்திர மாதகார்த்திகா சுத்தப் பிரதமையில் ஆரம்பமாகிச் சட்டியில் முடிய வேண்டியது ஐப்பசி 13 (30-10-70) பிரதமை அமாவாசையுடன் சம்பந்தப்பட்டு வருவதாலும் சாந்திரமாத கார்த்திகா சுத்தம் ஆகாமையாலும் அது விலக்கப்படத் தக்கது.

14-ஆம் திகதி சனிக்கிழமை (31-10-70) வாக்கியகாரரும், கணிதகாரரும் சாந்திர மாத கார்த்திகா சுத்தம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் கார்த்திகா சுத்தப் பிரதமை தினத்தில் (31-10-70) கொள்வதே சிவாகமத்துக்கும் உடன்பாடாகும்.

சில வருடங்களில் திதியின் க்ஷய விருத்தியினை ஐந்து நாட்களும ஏழு நாட்களும் கொள்வதுமுண்டு.

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

வேத நாயகன்
வேதியர் நாயகன்
மாதின் நாயகன்
மாதவர் நாயகன்
ஆதி நாயகன்
ஆதிரை நாயகன்
பூத நாயகன்
புண்ணிய மூர்த்தியே.

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

---

### நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவு அற்ற களஞ்சியம்.

---

## மயிலேறி விளையாடும் முருகையனே!

இராகம்: காம்போஜி :: தாளம்: ஆதி

பல்லவி

மயிலேறி விளையாடும் முருகையனே — என்றன்
மனமாற ஒரு வார்த்தை சொல்லையனே! — புள்ளி (ம)

அநுபல்லவி

உயிராகி உலகாகி ஒளியாகி ஒலியாகி
செயலாதி சுகபோக நெறிகாட்டு வானுகி (ம)

சரணம்

1. குருவாகி வந்திடும் கருணா கரா — அருட்
குமரா மனுதீத குணசே கரா — அன்புப்
பொருளான கதிரேம வடிவே லவா — தேவர்
புகழ்பாடி பணிந்தேத்தும் மறைநா யகா எங்கும் (ம)

2. பஞ்சாடு துயர்யாவும் அடைந்தே னப்பா — வெறும்
பாழான வாழ்வினிற் கிடந்தே னப்பா — வரும்
நஞ்சாடு மணிக்கண்டன் தரு மைந்தனே — தெய்வ
யானைகு றத்தி வள்ளி மகிழ் கந்தனே — செல்வ (ம)

—அளவையூர். "அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர்

## ஐப்பசி நோன்பு

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

இம்மாதத்தின் பெயர் ஐப்பசி. அது தமிழ்ப் பெயர். அது அச்சுவினி நட்சத்திரத்தைக்குறிக்கும். பௌர்ணமி + நாள் = பூரணை அச்சுவினியில் வருகின்றபடியால் இம்மாதத்தில் பூர்வ பக்கம அபரபக்கம் என்னும் வளர்பிறை, தேய்பிறை நாட்களில் இன்ன செயதல் வேண்டுமென்று பெரியோர்கள் விதித்துள்ளனர். அவர்கள் தேய் பிறையில் செய்தலினும் வளர்பிறையில் செய்தலையே வற்புறுத்தியிருக்கின்றார்கள். தாமும அப்படியே கைக்கொண்டனர். தேய் பிறையில் சிறந்த நாட்கள் துவாதசி தொடக்கம் அமாவாசை ஈறாயுள்ள நான்கு நாட்களுமே. வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சட்டி ஈறாயுள்ள ஆறு நாட்களுமே, இவ்வாறு நாட்களிலும் சிறப்புக்கள் மிகுந்த விழாக் கொண்டாட்டங்கள் பல இடங்களில் நடைபெற்று வருவது வழக்கம்.

இந்நாட்களில்பெரியோர்கள் எங்கனை எவ்வாறு இருக்க வேண்டும் என்று

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## 19-ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டம்

அல்லாரை காந்தீய சேவா சங்கத்தின் பத்தொன்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் அதன் தலைவர் திரு. மு. கா. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் கூடியது. இன, மத வேறுபாடின்றி மும்மொழி அறிஞர்களுக்கு விழா எடுப்பதென்றும் சைவசமய சம்பந்தமான சில நூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பெற்றது புதுவருட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பெற்றனர்.

## தீபாவளியே வழிகாட்டு

புலவர் சிகாமணி, பண்டிதர் வ. மு, இரத்தினேசுவர ஐயர்

சீர்மலி தெய்வம் பராவுந் தமிழகப்
பார்பொலி மக்கள் பண்டை நாண்முதல்
பண்டிகை என்ற திண்டிறல் நாள்பல
கண்ட செவ்வியில் கணகவர் வனப்பில்
மன்னும் மகாரும் மனைவியுஞ் சுற்றமும்
இன்னிசை திகழ இறும்பூ துடனே
பன்னு பாலுந் தேனு மினிகைப்
பொங்க லிட்டுப் போற்று கணபதி
இந்திரன் சூரியன் எழிலுறப் போற்றினர்
சந்ததம் சைவ மணங்கமழ வாழ்ந்தனர்
துட்ட ராகியோர் துன்பம் துடைக்க
கிருட்டின பரம கிருபை யோனும்
அருட்பெரு சத்திய பாமா அரிவை
தருக்கொடு தன்புடை யாக நரகனை
மாய்த்து ஒளியின் விளக்கண்ட
நன்னாளே வருக வருகவே.
வானவர் மகிழக் கொலை
மதுவுடன் மனதில் நினையார் என்றும்
தெய்வம் போற்றினர் அன்னோர்
வாழி நாமும் வாழ்வோம் மரபினுனே.
சுபம்.

## பரமேஸ்வராக் கல்லூரி
## சிங்களவர் — தமிழர்
## ஒற்றுமையின் சின்னம்

கல்லூரி அதிபர், சிவஞானச் செல்வர்

### திரு. மு ஞானப்பிரகாசம் B A; B Sc அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்

(முன் வளர்ச்சி — 2)

தாபித்தவரின் மனத்தின்கண் முற்கூறிய இலட்சியங்களை விட, எல்லோராலும் மிகவும் வேண்டப்படும் இலட்சியமொன்றுண்டு — அதுதான் சிங்களவர்களதும் தமிழர்களதும் ஒற்றுமையைப் பேணுதல். அவர், தமிழனாகவிருந்த போதிலும் இரு சாரார்க்கும் கலாசாரம் பொதுவாக இருந்துவருகின்றதென்பதை உணர்ந்து, அவ்வடிப்படையுண்மையைப் பாழாக்க முயலும முயற்சிகள் அடியோடு ஒழிக்கப்படவேண்டுமென்றெண்ணினார். பரமேசுவரா இவ்வொற்றுமையைப் பாதுகாக்கும் ஒப்பற்ற சின்னம். இக்கல்லூரி அவரிலட்சியத்தினின்றும் வழுவவில்லையென்பதில் நாம் பெருமை கொள்ளத்தான் வேண்டும்.

அரசியல்வாதிகள் வருவார்கள்; போவார்கள். கட்சிகள் தோன்றும்; மறையும் இவையெல்லாம் நடக்க வேண்டியவையே. எவ்வாறுயினும் பரமேசுவரக் கல்லூரியானது சிங்களவர் — தமிழர் ஒற்றுமைக்காக ஸ்ரீலங்கா கீதத்தை இசைத்த வண்ணமேயிருக்கும். கொழும்பிலுள்ள ஆனந்தா கல்லூரியில் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவின் போது, சேர். இராமநாதன் இவ்வழகிய தீவின்கண் வாழும் சிங்களவர்களையும் தமிழர்களையும் நோக்கி, தேசிய இயக்கத்திற்கு முரணான சக்திகளை முழுமனதுடன் ஒரேமூச்சாக எதிர்க்குமவண்ணம்வேண்டினார். இதனை அவர் பகவத் கீதையிலுள்ள வாக்கியமொன்றினால் வலியுறுத்தினார் அவ்வாக்கு "ஒருவனுடைய சொந்த கலாசாரமானது, இரவற் கலாசாரத்திலும் எவ்வளவோ மேலானதாகும்" என்பதேயாம். பருத்தித்துறை தொட்டு தெய்வந்துறை முனை வரையுள்ள எல்லா மக்களையும், தத்தம் முன்னோர்களால் பழமைதொட்டுப் பேணப்பட்டு வந்த கலாசாரங்களையும் இலட்

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரண ௵ ஐப்பசி ௴ ௬-௨ வெள்ளிக்கிழமை [1970]

## கந்தன் நோன்பு

முருகப்பெருமானை நோற்று அநுட்டிக்கும் விரதங்களுள் சிறந்தது கந்தசட்டி விரதமாகும். ஐப்பசி மாதம் அமாவாசைக்குப் பின்வரும் பிரதமை முதல் ஆறு தினங்களிலும் கந்தசுவாமியாரைக் குறித்து இவ் விரதம் நோற்கப்படும். இவ் வாறு தினங்களிலும் முருகக்கடவுளை தமப, விம்ப, கும்பங்களிலே விதிப்படி பூசித்து வெல்லம் சேர்த்து நெய்யினுற் சமைத்த மோதகத்தைநிவேதித்து பிறஉபசாரங்களையுஞ்செய்து வணங்கித் துதித்து அவருடைய புராணத்தைப் படித்து சிறிதளவு சலத்தை ஆசமித்து உபவசித்திருந்து சப்தமி திதியில் முருகப்பெருமானுக்கு விசேஷ பூசை செய்து விதிப்படிப் பாரணஞ் செய்தல் வேண்டும். ஆறு தினங்களிலும் உபவாசமிருக்க வியலாதவர்கள் ஒருபொழுது உணவருந்தி ஆறும்நாள் உபவாசமிருந்து சப்தமியிலன்று பாரணை செய்துகொள்ளலாம்.

மக்கள் தங்கள் இன்னல்களை நீக்கி இன்பமாக வாழுதற்கு முருகப்பெருமானுடைய திருவருளைப் பெறுதல் வேண்டும். அவரை நோக்கித் தவஞ்செய்தல் வேண்டும். இதனை யறிந்தும் மக்கள் தவத்தைச் செய்ய முன்வரவில்லை.

"அழிந்திவை யுரைப்பினு மவனிமாக்கடா மறங்கோலை
களவோடு மயக்க நீங்கலார்
துறந்திடு கின்றிலர் துன்பமற்றிலர் பிறந்தன சிறந்தனர்
முத்தி பெற்றிலார்".

"தவந்தனின் மிக்க தோன்றில்லைத் தாவில் சீர்த்
தவத்தனை நேர்வது தானுமில்லையாற்
றவந்தனினரிய தோன்றில்லையாற் றவந்தனக் கோப்பது
தவமதாகுமே"

இவ்வுண்மைகளை உரைத்தாலும் பூமியிலுள்ளவர்கள் கொலை, களவு முதலிய பாவங்களினின்றும் நீங்குகின்றிலர். அதனுல் முத்தியின்பத்தைப்பெருது சனன மரணத் துன்பங்களை யடைகின்றனர்.

இருமை யின்பத்துக்கும் ஏதுவாயுள்ள தவத்துக்கு உயர்வுமில்லை ஒப்புமில்லை. தவத்தை யொப்பது தவமேயாகும். ஆதலால் தருமத்தைச் செய்யுங்கள், பாவத்தை விலக்குங்கள். சிவபெருமானைத் தியானித்துப் பெருந்தவம் புரியுங்கள் எனக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் உலக மக்களுக்குத் தமதருமைக் கந்தபுராணத்தில் உபதேசித்திருக்கின்றனர்.

முருகப் பெருமானை முறைப்படி பய பக்தியுடன் வழிபட துன்னல்களெல்லாம் நீங்கும்.

"ஆங்காரமு மடங்கா ரோடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார் தினைப் போதளவு
மோங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்'
தூங்கார் தொழும்பு செய்யா ரென்செய்வார் யமதூதருக்கே'

யம தூதருடைய வேதனையை நீக்க விரும்புகின்றவர்கள் அகங்காரத்தை அடக்கல் வேண்டும்; பரமானந்தத்தில் திளைத்திருத்தல் வேண்டும். மனமிறந்த நிலையில் நினைப்பு மறப்பற்றிருக்க வேண்டும்; ஓங்காரத்துள்ளே ஒளி வடிவினனுகிய முருகப் பெருமானுடைய திருவுருவத்தைத் தியானித்திருத்தல் வேண்டும்; அடியார் பணி செய்து கொண்டிருத்தல் வேண்டும்; முருகப்பெருமானை விதிப்படி தொழுகின்றவர்களுக்கு இவ்விதமான ஞான சாதனைகள் சித்திக்கும்.

## அருள் பெறலாம்

— "இறை ஒளி" —

முற்று முணர்ந்த முழுமுதலை உள்ளிருத்திச்
சற்றுத் தொழுதாற் றகைமையாய்க் — கற்று
நிலையாம் அருள்பெறலாம் நீள் உலகில் என்றும்
கலைவாணி முன்னுவான் காண்.

உ

## மௌனகுரு வழிபாட்டுக் கழகத்தினர்

### யாழ்ப்பாணம் வருகைதந்தபொழுது

### சைவபரிபாலன சபையார் நாவலர் ஆச்சிரமமண்டபத்தில்

### 26-9-70 அளித்த வரவேற்பிற் பாடியது.

மோனமதை ஞானத்தின்
வரம்பாய்க் கொண்ட
மௌனகுரு வழிபாட்டுக்
கழகத் தீரே —
கானமழை பொழிந்திறையைக்
கருத்திற் கொண்டும்
கனிவான சொற்பொழிவு
பலவுஞ் செய்துஞ்
ஞானமுயர் சிவபதிகள் முருக கோட்டம்
நாடிவந்து தரிசிக்கும் அடியார்
கூட்டே
ஊனமிலா உள்ளொளியீர்
உண்மைக் கண்டெம்
உள்ளமெலாஞ் சிவம்பொலிதல்
உண்மைஉண்மை. 1

நால்வர் தந்த தமிழிலே
நால்வர் காட்டும் வழியிலே
நால்வர் சொன்ன நடையிலே
நால்வர் நின்ற நிலையிலே
நால்வர் கூறும் பொருளிலே
நால்வர் நெஞ்சை வைத்துமே
நால்வர் போல நம்மையும்
நடக்கச் சொன்னுர் நாவலர். 2

சைவ பரி பாலனம்
தந்த இந்த மண்டபம்
சைவம் காக்குஞ் சிந்தையில்
தாங்க எழுந்த மண்டபம்
சைவம் காக்கும நாவலர்
தமிழைக் காக்கும் மண்டபம்
சைவம் என்று வந்தவர்
தம்மைத் தாங்கும் மண்டபம் 3

தாயாம் நாட்டில் இருந்துநீர்
தமிழன் என்ற பெருமையில்
சேயாம் நாட்டுப் பற்றிலே
சேர்ந்து பலரும் வந்துளீர்
காயாம் பூவாம் கழுத்துடன்
காணும் மயிலின் மீமிசை
பாயாக் கங்கை கதிர்மலை
பார்த்தீர் எங்கள் முருகனை. 4

தினையுந் தேனுஞ் சேர்த்துநா
திகட்டி லாத சுவைதர
கனியும் அன்பின் வள்ளிதன்
கரத்தால் குழைத்து ஊட்டிட
வனைவில் எழிலை வீசியெம்
வாழ்வைக் கனிய வைப்பவன்
அனையின் அன்பைக் கடந்தவன்
அப்பன் முருகனை ஏத்தினீர் 5

கருதித் திளைக்கக் கடல்மடை
விட்டு டைந்தோடுமருள்
அருவித் திரளோ அமுதப் புனலோ
வெனவயிர்க்க
வருவித் தகரெனும் மௌன
குருவழி பாட்டுடையீர்
உருகிற் றுமைநாம் உவந்து
வரவினை ஏற்பதுவே. 6

— யாத்தவர்: "சேந்தன்".

## ஐப்பசி நோன்பு

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

கூறினர்? அவர்கள் கூற்றை மூன்று வகையாக்கலாம். அவர்கள் எங்களை நல்ல மனத்துடன், நல்ல வாக்குடன் நல்ல உடம்புடன் இருக்குமாறு கட்டளையிட்டனர். அதாவது நல்ல எண்ணங்களை எண்ணுதல், நல்ல சொற்களைச் சொல்லுதல், நல்ல செயல்களைச் செய்தல் என்பனவாம். இவற்றைக் கைக்கொள்ளின், இவ்வுலக வாழ்வில் ஈடுபடுவோர் அழியாப் பேரின்ப வாழ்வை எய்துவர் என்று அவர்கள் எண்ணினர் அவ்வாறு நடப்பின் இவ்வுலக இன்பம், சுவர்க்க இன்பம், வீட்டின்பம் என்பவற்றை முறையே எய்திதலுய்ப்போம் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இம மூவகை முயற்சியும் எவற்றைப் பற்றுக்கோடாகக்கொண்டுசெய்தலவேண்டும்? உயிர், உலகம, கடவுள் என்ற மூன்றையுமே. இவற்றுள் தலை சிறந்த கடவுளுணர்வே வேண்டற்பாலதாம். உயிர்களுக்கு பயம் பக்தி என்ற நல்ல குணங்கள் இரண்டும் இயைந்திருத்தல் வேண்டும். பயம் மாத்திரம் இருப்பின் அவனை அறிவுக் குறைவுள்ளவன் என்றே கொள்ளவேண்டும். "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்றூர் திருவள்ளுவர். பயத்தை உண்டாக்கியோர் அசுரர். அவர்கள் தீயவழியிற் சென்று, சுரர்க்கு அச்சத்தை உண்டாக்கி தண்டனை அடைந்தனர். தேவர்கள் பக்தியைக் கைக்கொண்டனர். அவர்கள் அசுரர்களுக்குப் பயந்து பரமனை (முருகப் பிரானை)யடைந்து நன்மையடைந்தனர். அவர்கள் இன்பம் அடைந்ததும், அசுரர் அழிந்தொழிந்ததும் இந்த ஆறு நாட்களிலே தான். ஆகலின் இந்த ஆறு நாட்களும் சிறந்தன. இவை எல்லாரும் தேசம், மதம், காலம், நிலைமை முதலிய வேறுபாடுகளைக் கருதாமல் கைக்கொள்ளற்குரியன. வால்மீகி தம் இராமாயணத்தில் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் வாயிலாக, எவராயிருப்பினும் கார்த்திகேயனிடத்தில் பக்திபண்ணுபவர் புதல்வன் முதலிய பலபேறுகளைப் பெறுவர் என்று சொல்லியிருப்பது கவனித்குரியது.

1. கந்தபுராணம் உற்பத்திக் காண்டத்தில் முருகப்பெருமான் தோன்றிய வரலாறு கூறப்பட்டிருக்கிறது. தேவர்களை அசுரர் வருத்துகிறர்கள். இந்திரன் ஓடி ஒளித்துக்கொள்ளுகிறன். சயந்தன் சிறையில் வருந்துகிறன். தேவர்கள் சிவபிரானைக் குறித்து தவமியற்றுகிறர்கள். அவர்கள் பொருட்டு சிவபிரானது மோனத்தைக் கலைக்கச்சென்ற காமன் உடல்துறக்கிறன். இறைவன் அருளால் முருகக் கடவுள்தோன்றி கயிலையில் விளையாடிக் காட்சியளித்து தேவர்கள் சேனாதிபதியாய் செந்தியில் எழுந்தருளுகிறர்.

2. இரண்டாவது அசுரகாண்டம்: இதில் அசுரர் தோன்றிய வரலாறு கூறப்பட்டிருக்கிறது. இவ்வரலாற்றை வியாழபகவான் முருகக் கடவுளுக்கு திருச்செந்தூ

(வளர்ச்சி 5-ஆம் பக்கம்)

## வீடு மாற்றமாமே ?



பக்தர் "செவ்வாய் வீடு மாறியிருக்கிறுராமே! இந்த மாற்றம் நாட்டுக்கு எப்படி அமையுமோ.........? என்னென்ன பயன்விளைக்குமோ! அறிந்தீர்களா"....?

சித்தர்: "என்னங்க நடக்கிறது.......? மாற்றம், மாற்றம் என்று துடிக்கிறீரே! எங்கும், எதிலும் ஏமாற்றமும், தடுமாற்றமும்தான் தாண்டவமாடுது...! 'செவ்வாய் வீடுமாறினுலென்ன? வியாழன் வீடு மாற இருந்தென்ன...? "ஆசறு நல்ல நல்ல — அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே" என்பதை அறியீரா? கடவுள் வழிபாட்டைப் பக்தியோடு முறைப்படி செய்வோர்க்கு எந்நாளும் இன்பமே! தீபாவலியை மக்கள் கடவுள் வழிபாட்டுத் தினமாகக் கருதுகின்றூர்களா?

"நாயன்மார் - நாதன்"

# முருகன் பெருமை

நல்லூர் முருகப்பெருமான் தேர்த்திருவிழாத் திருநாள் 30 - 8 - 70 ஞாயிற்றுக்கிழமை ஞாபகமார்த்தமாக நல்லூர் சைவசிகாமணி சமயப் பிரசாரகர், சிவபூஜாதுரந்தரர் சைவசமயப் பிரசங்க இரத்தினம் பொன் அப்புக்குட்டி அவர்கள் எழுதியது ; —

"அருவமு முருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறு கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன்வந்தாங் துதித்தன னுலகமுய்ய"
"காலமாய்க் காலமின்றிக் கருமமாய்க் கருமமின்றிக்
கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி யநாதியாய் நங்கட்கெல்லா
முனமா யிருந்தவள்ளல் மூவிரு முகங்கொண்டுற்றுன்"
ஆதலின் நமதுசத்தி யறுமுக னவனும் யாமும்
பேதகமன்ரு லெம்போற் பிரிவிலன் யாண்டும்நின்ரு
னேதமில் குழவிபோல்வான் யாவையு முணர்ந்தான் சீரும
போதமு மழிவில்வீடும் போற்றினர்க் கருளவல்லான்,

— கந்தபுராணம்

அநாதி மலமுத்தபதியாகிய பரமசிவன் தமக்கு ஒருபிரயோசன முங்குறியாது அநாதிமலபெத்தராகிய ஆன்மாக்களுக்கு மலநீக்கமும சிவதத்துவவிளக்கமும் சித்திக்கு பொருட்டு பெருங்கருணையினுலே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல என்னும் பஞ்ச கிருத்தியம் பண்ணுவர் அகண்டாகார சிவபோகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித்ததும்பி பூரணமாய் ஏகவுருவாய் ஆதியுமந்தமு மில்லா வரம்பெருஞ்சோதி திருவிளையாடல் காரணமாய் வேண்டிய வேண்டிய வடிவங்கொண்டு ஆன்மாக்களை ஈடேற்ற வேண்டுமென்ற பித்துடன் மூலகாரணமாய் நின்றவள்ளல் மூவிருமுகங்கொண்டுற்றுன். சிவபெருமான் உமையம்மையாருக்கு முருகன்பெருமையைக் கூறிய பொழுது அவன்நமது சத்தி, அவனும்நாமும் பேதகமன்ருல. எமபோல் பிரிவிலன் யாண்டும் நின்ருன் ஏதமிலகுழவிபோல்வான யாவையு முணர்ந்தான் சீரும்போதமும் அழிவில் வீடும்போற்றினர்க்கருளவல் லான் என்று அருளிச்செய்தார் மேலும் அநுநந்திதேவநாயனுர் தெரி விக்கின்ருர் வேதங்களும் ஆகமங்களும் ஆறங்கங்களும் அரிதாகிய கலை ஞானங்களுமாகிய நூல்களையாராய்ந்த அகத்தியமாவிருடிக்கு வேத வியாக்கியானத்தை அருளிச்செய்த ஞானசாரியனுகிய இளையபிள்ளை அழகிய வேதத்தைக்கற்று வல்லபமிக்க இருடிகட் கத்தலைவனுகிய விருடி தேவர்கட்குச் சுவாமிகட்கும் சிவனுக்குக் கிருபையாலுண்டாகிய புத்திரன தவத்தின் மிக்கோர்க்கு வழிபடும் தெய்வம். ஒலிக்கின்ற கடலுடன பொருகின்றவீரன், ஒழியாது கையினமலரும் மஞ்சனமுங் கொண்டு துதிக்குமடியார்கள் கருப்பத்தில் அழுந்தாவண்ணம அருள் செய்து மோக்ஷத்தைக் கொடுக்குங்கந்தசுவாமி, அவனது சீபாதங்கள இரண்டையும் எமதலைமீதும் இருதயத்திலும் சூடிக்கொண்டு நின் றேம் என்று போற்றிவழிபாடு செய்து வணங்கும் தவமுடையோம். "ஆதியோடந்தமாகிய நலன்கள் ஆறுமுகமென்று தெரியேனே" என்று வாயூறுகிருர் அருணகிரிநாதர். முருகன் பெருமைகளோ அளப்பில சீருந்திருவும் தூய்மையும் பொலிந்த நல்லூரெம்பெருமானின் திருவிழாக்களைத் தரிசித்து

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடு
மண்ணலா ரடியார்தமை யமுதுசெய்வித்தல
கண்ணினுலவர் விழாப் பொலிவு கண்டார்த
லுண்மைய மெனிலுலகர் முனவருகென வுரைப்பார்.

— பெரியபுராணம

இப்பெரிய புராணச் செய்யுளின்படி எம்பெருமான் திருவிழாப் பொலிவுகண்டார்தல் மண்ணினிற் பிறந்தார் பெறும் பெரும்பேறு என பது உண்மையானுல் இவ்வெலும்புகள் பெண்ணுக வரக்கடவது என்று ஞானசம்பந்தா கூற குடத்திலிருந்த எலும்புகள பெண்ணுருவடைந்து தோன்றின. மேலும்

துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
யிறந்தவர்கள் காமுறு மிருங்கடணியற்றி
யறம்பலவு மாற்றி விருந்தோம்பு முறையல்லால்
பிறந்த நெறியுளதோர் பேருவகையாதோ,

கந்தபுராணம்

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தானென்
றைம்புலத்தா ரோம்பல் தலை. — பொய்யாமொழி

யாவர்க்குமா மிறைவற் கொருபச்சிலை
யாவாக்குமா பசுவுககோர் வாயுறை
யாவர்க்குமா முண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரைதானே.

— பத்தாம் திருமுறை

நாம்செய்த புண்ணியம் காரணமாக சைவமாம் சமயம் சாருமூழ பெற்று மானிடராய்ப் பிறந்து சிலகாட்களிருந்து அறியாமை காரண மாக எவ்வளவு பாவங்களைச் செய்திருேம். தந்தைதாய் குரு தெய்வம என்று போற்ற பெறும் எம் உரிமைகடமைகளைத்தானும் மறந்து விடுகிறோம். நாம் பிறந்தது கடவுளை வழிபட்டு உய்யவே என்பதை மறந்து விடாது மேலே கண்டகடமைகளைத் தொண்டுகளைச் செவ்வனே செய்து நல்லொழுக்கத்தினின்று பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்து விபூதி உருத்திராக்கம் பஞ்சாட்சர சாதனங்களை மேற்கொண்டு அநேகமுயி ரைக் கொன்று கொன்று தின்றேன் என்ற தீய பழக்கத்தைத் தவிர்த்து சமயதீக்கை பெற்று ஒழுககவழிதவருமல் அன்போடு அறம்பலவுமாற்றி சிறப்பான சிவ தருமமாம் சரியை கிரியை யோகம் முதலிய சாதனை களைப் புரிந்து திருவருளைப் பெற்று இருவினையொப்பு மலபரிபாகம் சத்தினி பாதமெய்தி ஞானத்தையடைந்து எம்பெருமான குஞ்சிதபாத நிழலில் இன்பமனுபவிப்போமாக.

## ஈழம் வருகின்ருர்

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதந் தம்பிரான் சுவாமிகள் பாரதநாட்டில் தலயாத்திரையை முடித்துக்கொண்டு இம் மாதம் 27 ஆந்தேதி ஈழம் வருகின்ருர்கள். ஆங்கு பல் வேறிடங்களிலும் அவருடைய சுதாப்பிரசங்க நிகழ்ச்சி இடம்பெற்றது நசி.

## ஐப்பசி நோன்பு

[2-ஆம் பக்கத்து வளர்ச்சி]

ரில் வைத்துக் கூறியவாறு புராணம் கூறுகிறது.

அசுரேந்திரன் தன்குலம் பெருகும் பொருட்டு தன் குலக் கன்னிகை மாயையை ஏவி, காசப முனிவரிடம் சூரன் முதலிய அசுரர்களைப்பெறச் செய்கிறன் அம் மூவர்க்கும் தந்தை, தாய், குரு மூவரும் மூன்றுவித உபதேசம் செய்கிறர்கள். கடைசில் இம் மூவரும் தவஞ்செய்து இறைவனிடம் ஒப்பற்ற வரங்களைப்பெறுகிறர்கள் சூரன் மகேந்திரபுரியை தலைநகராக்கிக் கொண்டு திக்குவிஜயஞ்செய்து வெற்றி பெற்று 008 அண்டங்களில் ஆணை செலுத்தி, சயந்தனையும், தேவர்களையுஞ் சிறை வைத்து அரசு செய்கிறன். அசுரர் வரலாறு கேட்ட முருகப்பெருமான் இந்திரனுக்கு அஞ்சலளித்து காத்துவநுவ்தாக வரமளிக்கிறர்

3ம்காண்டம்: மகேந்திரகாண்டம் அதில் கூறப்படுவது:

வீரவாகு தேவரை தூது விடுத்து சூரபன்மனிடம் அனுப்புகிறர். அவர் அவனுக்கு எத்தனை நன்மதி கூறியும் அவன் ஒத்துக்கொள்ளவில்லை வீரவாகு தேவர் முருகக் கடவுளிடம் வந்து நடந்த செய்தியைத் தெரிவிக்கிறர். கிரௌஞ்ச மலையைப் பிளந்த வேலினையுடையவராயினும், அதனை உடனே எறிந்து சூரனை வதைக்காது அறநெறி முறையால் தூதனுப்பி நீதிப்படி போர்செய்து தேவர்களைக் காப்பாற்றுவதற்கு இசைந்தார்

4ம் காண்டம்: யுத்த காண்டம் இதில், முருகக் கடவுள் கடலைத் தாண்டி வீரமகேந்திரஞ் சென்று சூரபன்மனுதியவர்களை வென்று, ஒவ்வொருவராய் வதை புரிகின்றனர். இறுதியில் சூரன் தன்னந்தனியனுய் நிற்கையில், அவனுக்கு அறிவுறுத்தும்பொருட்டு பெருமான் பெருவடிவம் எடுத்து நல்லுரைகள் நல்கியும், அவனுடைய ஆணவம் அடங்கவில்லை அப்போது வேலாயுதமாகிய ஞானசக்தியால் அவனைக் கூறுபடுத்தவே, கோழியும் மயிலுமாக அவன்வர கோழியைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் கொண்டு அருள் செய்தார் என்பது சரித்திரம்.

5ம் காண்டம். தேவகாண்ட இதில், வெற்றிபெற்றுத் திரும்பிய முருகக்கடவுளை இந்திரன் தனது மகள் தெய்வயானையைத் திருமணஞ் செய்து கொள்ளுமபடி வேண்ட கடவுளும் மனம் இசைந்து திருப்பரங்குன்றத்தில் திருமணஞ் செய்தல் கூறப்பட்டது.

6வது: தட்சகாண்டம். இதில், தக்கன் தான் செய்யும் யாகத்தில் சிவபிரானையும அம்மையாரையும் அவமதித்தான். தேவர்கள் அவனுக்கு உடந்தையாயினர். அதற்காக வீரபத்திரர் தோன்றி யாகத்தை அழித்தனர், தக்கனுக்குத் தலைபோய் ஆட்டுத்தலை உற்றது. தேவர்கள் தக்கனுக்கு உதவிசெய்த அபவாதத் தீர்ந்து அசுரர்களால் துன்பமடைந்தனர் இதுவே கந்தபுராணச் சரிதைக்கு அடிப்படை. இரண்டாம் பகுதியாக வள்ளியம்மை திருமணம் கூறப்படுகிறது. இதோடு சரித்திரம் முற்றுப்பெறுகிறது.

ஆகவே, ஆறுகாண்ட வரலாறுகளுக்கும் சிவஞானபோதத்தில் ஆறு உவமைகள் வருவதைக் காணலாம், விரிக்கிற் பெருகும்.

—:—

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இளவாலை மாரீசன் கூடல்
1. பாவிலுப்பிள்ளை யோசேப்பு இம்மானுவலும்
2. மனைவி மாரியம்மாவும் வழக்காளிகள்
இல. M. B. 10024

எதிராக

யாழ்ப்பாணம் இல 40/1 மூன்ரும் குறுக்குத்தெரு
வி கே. சுப்பிரமணிரம் கைம்பெண்
சிவபாக்கிய லெட்சுமி காலம் சென்ற
வி, கே சுப்பிரமணியத்தின் சட்டப்பிரதிநிதி
பிரதிநிதி — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M. B. 10024-ல் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோடடுக்கட்டளைப்படி கீழ்க்காணும் ஒருதுண்டுக்காணி 1970-ஆம் ஆ நவெம்பர் மாதம் 29-ம் திகதி (29-11-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை :-** முதல் வட்டி ரூபா 3040/- மேலும் ரூபா 2000/-க்கு 31-5-1968 தொடக்கம் 16-1-1970 வரையும் 12 வீத வட்டியும கூடிய தொகைக்கு இறுபடும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 506/58ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோயிற்பற்று வேலணை கிழக்கு இறையக்கணந்தாழ்வு நி பர. 90. தொண்ணூறும் பனைகளும வடலிகளும் தென்னைகளும் கிணறுகளும். எல்லை கிழக்கு உறுதிப்படி செல்லத்தி னுரிமைக்காரரின் ஆதனம். வடக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் இராமநாதர் கந்தையாவுக்கும் பங்காளருக்கும் பசுபதியார் அம்பலவாணருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு அண்டி வேலுப்பிள்ளை பெண் இளையபிள்ளையின் ஆதனம். தெற்கு விதையா நிலம். இதடங்கலிற சொரியலாய் அரைவாசியில் நி ப, 12 1/2 பன்னிரண்டரையும் அதைச் சேர்ந்தவைகளும்.

S. இரத்தினசபாபதி, J. P
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

விரேசன் ரோட்,
கோண்டாவில், 14-10-70

எம். 330 23-10-70

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, க. செ. த. செ செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1—4—68 முதல் 31—3—69 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 29—11—70 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட பிற நீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

C. Ragunathan
கொம்மிஷனர்

வண்ணார்பண்ணை 22-10-70

எர். 331 23, 30-10-70

# 3-ம் உலகத்தமிழ்மாநாடு

— தொகுத்தளித்தவர்: திரு. சூ க. சுப்பிரமணியன் —

(முன்வளர்ச்சி — 3)

**சங்க இலக்கியங்கள்:**

வடமொழியின் காலமும் தமிழின் காலத்தைப் போலவே வரையறுக்க முடியாத ஒன்ருகும் அசோகனது கல்வெட்டுக்கள் இந்திய சரித்திரத்தை வெளிப்படுத்துகின்றன. அசோகனது கல்வெட்டுக்களும், அலெக்சாண்டரின் படையெடுப்பும் இந்திய வரலாற்றிற்கு இன்றியமையாத ஆதாரங்களாகும். கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்து காஞ்சி நகரம் பௌத்த மதத்திற்கும் வடமொழிக்கும் ஆராய்ச்சி மையமாக இருந்ததாக அறிகிறோம். தற்போதைய ஆந்திர மாநிலத்தில் கிடைக்கப்பெற்ற இரண்டாம் நூற்றாண்டு நாணயங்கள் தமிழ மொழியிலும் பிராக்ருதியிலும் இருப்பதால், அக்கால இந்தியாவின் தென் பகுதியில தமிழ் ஆட்சி மொழியாக இருந்ததை அறிகிறோம். வேதங்களில் பழமையான ருக்வேதத்தில் 20 திராவிடச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. ஞானசம்பந்தர் காலத்தில் இருந்து தமிழ் இலக்கிய பரம்பரை ஓர் புதிய திருப்பத்தை அடைந்தது என்று கூறலாம். அவரது காலத்தில் ஆரம்பமானது தான் பக்திக் காலம். மொழியின் நடை, உணர்வு, கையாளும் விதம் எல்லா வகையிலும் புதிய உருவத்தை பெற்றது பக்திக் காலம் ஆகும். தமிழகத்தின் கட்டிடக் கலை, சிற்பக் கலை, கல் வெட்டுக்கள் யாவும் தமிழரின் காலத்தை வரையறுப்பதற்குப் பயன்படுகின்றன. வான சாத்திரம், மனித உடல்கூறுகள் முதலியவற்றைக்கொண்டும் காலத்தை நிர்ணயிக்கலாம். பூமியிலும், கடலிலும் புதைந்துள்ள மனித உடலின் எஞ்சிய பகுதியான எலும்புக் கூடுகளில் உள்ள புளோரின் என்ற மூலப்பொருளின் அளவைக் கொண்டு எலும்புக்கூட்டத்தின் காலத்தையும அதன் மூலம் ஆதி காலத்து மனித இனத்தின் காலத்தையும் நிர்ணயிக்க முடியும். இந்த முறையில் தமிழர்களின் காலத்தை நிர்ணயிக்க முடியும். இந்தியாவின் தென்பகுதி முழுவதும் தமிழின் திரிபு மொழிகள் பழக்கத்தில் இருந்தன என்பதை அறியலாம், புகலூர் கல்வெட்டுகளில் அப்பன், மகன், பேரன் ஆகிய மூன்று தலைமுறை சேர மன்னர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்களது ஆட்சிக் காலம் இரண்டாம் நூற்ருண்டு என நிர்ணயிக்கப்படுகின்றது. மேற்கூறிய ஆதாரங்களை முன்னுக வைத்து கம்ப்யூட்டரின் உதவியால் சங்ககால இலக்கியங்களின் காலங்களை நிர்ணயிக்கலாம்.

— 'லண்டன் முரசு' (1970)

(வளரும்)

## தமிழ் கற்கவிருக்கும் பிரிட்டிஷ் பேராசிரியை

எடின்பரோ சர்வகலாசாலை மொழித்துறை பேராசிரியை திருமதி எலிசபெத் உலடாய் தமிழ் மொழி கற்கும்நோக்குடன் தமிழ் நாட்டிலுள்ள அண்ணாமலைச் சர்வகாலையிற் சேரவிருக்கிறர். அவர் தமிழ்மொழி பற்றியும், தமிழ்க் கலாசாரம் பற்றியும், தமிழ் மொழி ஒலிமுறைப்பற்றியும் கற்கும் அதே வேளையில் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் விரிவுரை நிகழ்த்துவார்கள்,

## சாஹித்திய விழா

யாழ்ப்பாணத்தில் தைப் பொங்கலிலன்று சாஹித்திய விழாவொன்றினைச் சிறப்பாக நடத்துவதற்கு சாஹித்திய மண்டல உறுப்பினர் முயற்சிசெய்கின்றனர். விழாவிற்கு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களை அழைக்கவும் தீர்மானஞ் செய்துள்ளனர்.

—:—

# பரமேசுவரக் கல்லூரி

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

சியங்களையும் அடிப்படியாகக் கொண்ட வாழ்வை அமைத்துக்கொள்ளுமாறு வேண்டினர்.

19ஆம் நூற்றுண்டின் பின்னரைக் காலத்தின் போது தான் ஆன்மிகப் புரட்சிகளும் எழுச்சிகளும் நிகழ்ந்தனவென்பதைச் சரித்திரவாசிரியர் கூறுகிறபர் இந்தக் காலத்தின் போது தான், நான்கு நூற்றுண்டுகளுக்கு மேலாக வெளிநாட்டாருடைய ஆட்சியின் காரணமாக, மறைந்து ஒழியுந்தறுவாயிலிருந்த சைவமும், பௌத்தமும் மீட்கப்பட்டன. புத்துயிரளிக்கும் திட்டத்தில் உழைத்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், அனகாரிக தர்மபால போன்ற பெரிய சமயத் தலைவர்களாவர். நாடு முழுமையும் எமது பழமை மிக்கதும் புனிதமானதுமான கொள்கைகளைப் பற்றிப் பிரசாரஞ்செய்து மக்களுடைய அலட்சியத்தையும் ஊக்கமின்மையையும் ஒழித்தார் நாவலர்பெருமான். இராமநாதவள்ளல் இந்து மாணவ மாணவியர்க்கென வேறான பாடசாலைகள் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். வித்தியாசாலைகளையும் தாபித்தார்.

நாவலர் எங்குவிட்டாரோ அங்கு, சேர். பொன். இராமநாதன் தமது தேசிய இயக்கத்தைத் தொடங்கினர். இந்நாட்டின் கல்வித்திட்டம பொருத்தமற்றதாயும், குறிய நோக்கமுடைதாயும் இருக்கக்கண்டார். சைவ சமயக் கொள்கைகள் ஒழுக்கங்கள் புறக்கணிக்கப்படுவதைக் கண்டு மிகவும் கவன்றார் இராமநாதவள்ளல். தேசிய ஒற்றுமைக்கு முரணான இயக்கத்தால், பழமையும் பெருமையுமிக்க மொழிகளாகிய தமிழும், சிங்களமும் அரசுரிமையிழந்ததையிட்டு வருந்தினர். உலகைத் துறந்தும், தன் செல்வமூழுமையையும் அர்ப்பணித்தும தன் கடைசிக் காலத்தைத் தேசியக்கல்வியின் முன்னேற்றத்திற்காக உபயோகிக்கத் தீர்மானித்தார்.

இம்முடிவு — நாட்டின் கண்ணுள்ள ஒரு தனிமனிதனால் செய்யக்கூடிய காரியமல்ல. இராமநாதவள்ளல் இதனை புகழுக்காகவல்ல உலக நன்மைக்காகவே செய்தார்.

அவர் கல்வியை புனிதமும் தெய்வீகமும் நிறைந்ததெனக் கருதினர். அவ்வெண்ணத்துடன் தான் மகளிர்க்கென இராமநாதன் கல்லூரியையும், ஆண்களுக்கென பரமேசுவரக் கல்லூரியையும் தாபித்தனர்.

பரமேசுவரக் கல்லூரியின் மேற்பார்வை பெரும புலமைமிக்கோர்களதும், முன்னேக்குடையவர்களதும்கையிற்றுணிருந்து வந்தது அவர்கள் மேன்மையான ஒழுக்கமிக்க கல்விமான்களாகத் திகழ்ந்தனர் இந்தூரிலுள்ள மகாராஜாக் கல்லூரியில் மிக அண்ணிதான காலமட்டும் அதிபராகவிருந்த கோர்டன் F. பியேர்ஸ், சேர் அருணாசலம் மகாதேவா, கலாநிதி S நடேசன் முதலியோர்களது தரத்தைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருந்தார்கள். தாபித்தவரின் இலட்சியத்தையும், நோக்கத்தையும் பேணியடைய வேண்டுமென்ற முயற்சியில் அவர்கள் சளைக்காதவர்கள். அவர்களுடைய புனித முயற்சியைக் குறுகுணையாக இந்நாட்டு மக்களுக்குள்ளிருந்து தன்னலமற்ற சேவைபுரியும் மனப்பான்மையடைந்த ஆசிரியர்கள் நியமனஞ் செய்யப்பெற்றனர்.

1930 இல் சேர் இராமநாதன் சிவபதமெய்த, அன்னாரின் தெய்வப்பணி அறிவாலும் அநுபவத்தாலும் சிறந்த தன்னமைமற்ற பெரியார் சு. நடேசபிள்ளையை அடைந்தது. கலாநிதி நடேசபிள்ளை அயராதுழைத்தார். தெற்கில் தோன்றிய தேசியக் கல்வி இயக்கத்திற்கு கலாநிதி பெரிய துணையாகவிருந்தார். அரசாங்க சபைக் காலத்தில் (State Council Era) கல்விச் சபையின் அங்கத்தினர் என்ற முறையில், கலாநிதி கன்னங்கராவினுடன் இலவசக் கல்விமுறையைக் கொண்டுவருவதற்கு ஒத்துழைத்தார். அவரது தொண்டின் பெருமைக்குக் காரணம் அவருடைய கடவுள் பக்தியும் நல்லொழுக்கமும் அறிவாகும். அரசாங்கத்திடம் இரு கல்விக் கூடங்களையும் சொத்துக்களுடனும் ஒப்படைத்தமை அவருடைய தன்னலமின்மைக்குச் சான்றாகும்.

இராமநாதன் கல்லூரியிலும பரமேசுவரக் கல்லூரியிலும் நடந்து வரும் கலாசாரப் பணிகளைப் பற்றிக் கூறுது விடுவேனுயில், நான் எனது பணியைச் செவ்வனே முடிக்காதவனுவேன் கல்லூரிகள் வளவுக்குள்ளேயுள்ள மூன்று சிவன்கோவில்களிலும் நிகழும் நித்திய நைமித்திகங்களும் மற்றும் சமய, கலாசார நிகழ்ச்சிகளும் சமய வளர்ச்சிக்கு உறுதுணைபுரிபவையாகும்.

இராமநாதன் வாழ்ந்து மறைந்த கிருகம் "இராமநாதன் அகம்" என வழங்குகின்றது. அவ்வகத்தில் இராமநாதன் இசைக் கல்லூரி நடைபெறுகின்றது. இராமநாத வள்ளலுடைய ஆன்மசக்தி நமக்கு ஊக்கமளிக்கும் முறையில் இராமநாதன் சமாதி அமைந்துள்ளது. இராமநாதன் கல்விக் கழகம் பெண்கள் கல்விக்கு அரும் பணிபாற்றுகின்றது.

எப்பவோ நிகழ வேண்டிய கல்வித் துறைப் புரட்சியின் ஆரம்பத்தினைக் இப்பொழுது காண்கின்ருேம். நாட்டின் கல்வியமைப்பில் பெரிய மாற்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆரம்பக் கல்விமுறைகணிட்ட கல்விமுறை பல்கலைக்கழகக் கல்விமுறை எனக் கல்வித் துறையைப் பிரிக்கலாம். கல்வி சமூகம் பற்றியதும் விஞ்ஞானப் பொறியியற் றுறைபற்றியதுமாகும். அரசாங்கம் தேசிய மொழிகள் மூலம் கல்வியூட்டப்பட வேண்டுமென்ற திட்டத்தை நாம பெரிதும் பாராட்டுகின்ருேம்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கட்டுடை மானிப்பாய்

இல. M. B. 10712

1. ருமலிங்கம தம்பிராசா, மனைவி
2. ருசம்மா

வழக்காளிகள்

எதிராக

உருமபராய், நாகலிங்கம் கைலாயசுந்தரம் தானுகவும், தனதுன் பெண் காலஞ்சென்ற சிவஞானவதியின ஆஸ்திககு பிரதிகாரியஸதராகவும் எதிராளி

யாழப்பபணம டிஸ்திறிக்கோட்டின் M. B. 10712-ம இலக்க வழக்கில எனககுக் கிடைதத கோடடுக் கட்டளைப்படி, பினனல விபரிக்கப்படும துணடுககாணி, 1970-ம ஞு மார்கழி மீ 21-ந் டீ திங்கட்கிழமை முறபகல 10 மணி தொடக்க அந்தக காணிககுள் நினறு பிரசிததஏலததில விறகப்படும்.

தீர்வைதொகை: — முதல் வட்டி ரூபா 5162/50ம், 24-3-69 தொடககம் 25-2-70 வரைக்கும் ரூபா ‑000/ க்கு 10 வீத வட்டியும் அதனபின் முழுத்தொகைககும இறுக்குமவரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 396/24 சதம.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்பபாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று உரும்பராய் இறை "சடையன் தோட்டம" அலலது கமலப்புளியடி" நிலப்பரபபு 14ம் குளிகள 2 1/₂ மறு பாகஙகளும். இதில தெறகுபபக்கமாக நிலப்பரப்பு ஏழு (7). இந்த நிலபபரப்பு 7 ககும் எலலை கிழங்கு: வைத்திலிங்கம நடேசலிங்கததின் ஆதனம, வடககு: இதில் மிகுதியான துணடுக காணி, மேறகு: கா லிங்கம் பெண் புஷபலீலாவதியினதும் மறு பேருடையதுமான ஆதனங்கள், தெற்கு: சுப்புறமணியம் நலலநாதனுடையதும் பங்காளரினது மாதனங்கள, மேலும முழுக் காணிகளுக்கும சேர்மதியாய் இருக்கும கிணற்றில் பங்கும் பயிர்கள உரிமையும உள்ளதும் உடையதும். இது முழுவதும், அத்துடன் கிழக்குப்பககமாக இருககும் தெருவிலிருந்து இககாணியின மிகுதித் துண்டுக காணியின ஊடே போகும ஒழுங்கையின் பாவிப்பு உரிமையும,

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
21-10-70

எ.பி.பி. எதிர்மன்னசிங்கம்
வெந்திஸ் கொமிஷனரும விலைமதிப்பாளரு
எம். 329 23—10—7(

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணூர்பண்ணை காங்கேசன்துறைவிதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 23—10—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

---

## உ
## மெய்கண்டதேவர் குருபூசை

நாள்: ஐப்பசிமீ கரு-ஆம் உ (30-10-70) வெள்ளிக்கிழமை
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்
ஆரம்பம்: இரவு 7 மணி விரிவுரைக் கூட்டம்

தலைவர்: சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை

நிகழ்ச்சிகள்

கடவுள் ஆராதனை
தமிழ்மறையோதல்: ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்க
விரிவுரைகள்:

1. தலைவர் முன்னுரை.
2. மெய்கண்டார் —பண்டிதை ச. அமிர்தாம்பிகை B, A.
3. சிவஞானபோதம் 'முதற்சூத்திரம்' — திரு எஸ். ஏ பொன்னம்பலம் B, A.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

ஆ. தனபாலசிங்கம்
காரியதரிசி

மூ. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம். 23-10-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

இல. M. B. 9930

1: கே, சதானந்தன் அவரது மனைவி
2, இலட்சுமி இருவரும், ஊரெழு, சுன்னுகம்.

— வழக்காளிகள்

எதிராக

1. சிதம்பரி கிருஷ்ணன், ஊரெழு கிழக்கு, சுன்னுகம்.

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9930-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 970-ம் ஞு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி (18-11-70) புதன்கிழமை முதபகல் 10 மணி தொடககம அந்தக் காணிககுள் நினறு பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா. 3200/-க்கு 17-4-68 28-3-69 வரைக்கும் ரூபா 2000/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா. 319-15. இதில் கழிவு ரூபா 1100/-

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழப்பாண மாவட்டம, வலிகாமம் கிழக்குப்பிரிவு புத்தூர் கோவிற்பறறு அச்செழு இறை "அங்காத்தில புலத்தில் தாளைமடியிற காடும தாளைமடையும் குமுளம்புலமும" நிலப்பரப்பு 12-ம குழி 14½ ம எல்லைகள கிழக்கு மாணிக்கம கந்தையாவின் ஆதனம. வடக்கு கையிலாயபிள்ளை முதலித்தம்பியின் ஆதனம். மேற்கு 12 அடி அகலப்பாதை, தெற்கு 12 அடி அகலபபாதை அடங்கலும.

2 வடமாகாணம், யாழபபாண மாவட்டம் வலிலிகாமம் வடக்கும்பிரிவு, மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை, பன்னையன் கலட்டியும், ஆயிலியக் கலட்டியும் உயிலக் கலட்டியும் நிலப்பரப்பு 9-ம் குழி ½ ம இத்துடன் கிணறும் எல்லைகள கிழக்கு ஒழுங்கை, வடக்கு காசிநாதர் நாகமுத்தரதும் அவரது மனைவி சின்னபபிள்ளையினதும் ஆதனம், மேற்கு இராமன் நன்னியனின் ஆதனம்: தெற்கு ஒழுங்கையும் அதடங்கலும,

க, சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்.
மதிப்பாளரும்

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 18 10-70, M 328. 23—10—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

எஸ், கணபதிப்பிள்ளையினது கைம்பெண் பூரணி அலியஸ் பூரணம் காரைதீவு மேற்கு. —வழக்காளி

M B 11288 எதிராக

1. விநாயகர் சொக்கலிங்கம் அவரது மனைவி
2. முத்தம்மா இருவரும் காரைதீவு மேற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11288 ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும துண்டுக்காணி 1970-ம் ஞு நவெம்பர் மாதம் 15-ந் திகதி 15-11-70 ஞாயிற்றுக்கிழமை முறபகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 913-40 க் 30-11-69 தொடக்கம் 2-3-70 வரைக்கும் ரூபா 500/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 251-15,

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பற்றுப் பிரிவு கரரைதீவு கோவிற்பறறு காரைதீவு வடக்கு இறை "விககாவில்" நிலப்பரப்பு 1 ம் குழி 6 ம் அத்துடன் பனை ரங்களும் வடலிகளும் வான்பயிர் வளர் பயிர்களும், எல்லைகள் கிழக்கு முத்தையாவினது மனைவி மங்களததினுதனம, வடக்கு வயிரவி சின்னத்தம்பியினதும் நாகமுத்து தமபிபபிளளையினதும் ஆதனங்கள். இதற்கு முன்பக்க ஒழுஙகை, மேறகு ஆறுமுகம் கந்தையாவினுதனமும், தெற்கு சரவண செல்லப்பாவினதும் சங்கரப்பிள்ளை அப்புத்துரையினதும் உரிமை ஆதனம் அதடங்கலும அத்துடன் வடக் கெல்லையிலுள்ள வயிரவி சின்னத் தம்பிக்குச் சேர்ந்த கிணற்றில் பங்கும் பாவிப்புரிமையும், கிழக்கெல்லையிலுள்ள நாகமுத்து தம்பிப் பிள்ளைக்குச் சேர்ந்த காணியால் கிணற்றுக்குச் செல்லும் வழிவாய்க்கால் உரிமையும் உள.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்,

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 10.10-70
எம். 327 23.10-70.